யாழ்ப்பாணம்

Registered as a Newspape

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 27 ஞாயிற்றுக்கிழமை (09-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 74

# வவுனியாப் பகுதியை நோக்கி புலிகள் ஆட்லறித் தாக்குதல்!

## நள்ளிரவு விழுந்த ஷெல்களுக்கு 2 பொலீஸார் பலி

வவுனியா, பெப்ரவரி 9

**வெள்ளி நள்ளிரவு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாப் பகுதியை நோக்கி புலிகள் மேற்கொண்ட ஆட்லறி ஷெல் தாக்குதல்களின் போது இரு பொலீஸார் கொல்லப்பட்டனர். பொலீஸாருக்குச் சொந்தமான இரு பஸ்கள் முற்றாகச் சேதமடைந்தன. பொலீஸாரின் விடுதியும் முற்றாகச் சேதம் அடைந்தது. இரவு 12.35 மணியிலிருந்து 2.30 மணி வரை நீடித்த இந்த இரண்டு மணி நேரத் தாக்குதல்களின் போது வவுனியா இராணுவ முகாம், விமானப்படை முகாம், பொலீஸ் நிலையம் ஆகியவற்றுக்கும் வவுனியாவில் மாமடுவ, தேக்கவத்தை, ஈரப் பெரிய குளம் போன்ற இடங்களிலும் சிறு சிறு சேதங்கள் ஏற்பட்டன என்று உபாலி செய்தி நிறுவனத்தின் வவுனியாச் செய்தியாளர் ஜின சேன ரத்துகமகே பி. பி. ஸி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார்.**

ஜினசேனரத்துகமகே பி.பி. ஸிக்கு நேற்று அளித்த பேட்டி வருமாறு:-

கேள்வி: ஆட்லறி ஷெல் தாக்குதல்களை அடுத்து வவுனியாவில் நிலைமை எவ்வாறு உள்ளது?

பதில்: தாக்குதலையடுத்து வவுனியாவில் பொது மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது. இருப்பினும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட பதற்றத்தைப் போக்க பாதுகாப்புப் படையினர் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஈடுபட்டார்களே தவிர இவ்வாறான தாக்குதல்கள் இடம் பெறும்போது என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் பொது மக்களுக்குக் கூறவில்லை.

கேள்வி: எத்தனை ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன எனக் கூற முடியுமா?

பதில்: 27 ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டதாக அறிகிறோம். ஆனால் 20 ஆட்லறி ஷெல்களே விழுந்து வெடித்திருந்ததை வவுனியா இராணுவ முகாம், வவுனியா விமானப் படை முகாம், வவுனியா பொலீஸ் நிலையம் மற்றும் பிற இடங்களில் காண முடிந்தது.

கேள்வி: விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குகள் சரியாக அமைந்தனவா?

பதில்: அவர்களின் முக்கிய இலக்காக அமைந்தது இந்த முகாம்கள். வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் வரை ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

கேள்வி: எந்தப் பகுதியில் இருந்து இந்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன?

பதில்: ஓமந்தைக்கும் மாமடுவுக்கும் இடைப்பட்ட வானில் இந்த ஆட்லறி ஷெல்களின் ஒளியைக் காணக்கூடியதாக இருந்ததை பாதுகாப்புப்பிரதேசத்திலிருந்த பொலீஸார் கண்டுள்ளனர்.

கேள்வி:- வவுனியா நகர மக்கள் இப்படியான தாக்குதல்கள் தொடரும் என எண்ணுகிறார்களா?

பதில்:- விடுதலைப் புலிகள் இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய மூன்று ஆட்லறிகளை ஓமந்தைப் பகுதியில் பூட்டி வைத்துள்ளனர் என வவுனியா மக்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ நடவடிக்கை தொடர்கிறது விமானங்கள் தொடர்ந்து தாக்குதல்

கொழும்பு, பெப்ரவரி 9

வவுனியாவில் படையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ''எடிபல'' (துணிவான சக்தி) இராணுவ நடவடிக்கை நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றது.

படையினர் 23 கிலோ மீற்றர் தூரம் முன்னேறி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

புலிகளின் நிலைகளை நோக்கி விமானங்கள் நேற்றும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 8 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

வவுனியா, பெப். 9

வவுனியாவில் படையினர் ஆரம்பித்துள்ள '' எடிபல '' இராணுவ நடவடிக்கையால் 8 ஆயிரம் பேர்வரை இடம் பெயர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கண்ணாட்டி, பிரமனாலங்குளம், பெரிய தம்பனை, பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மடுக் கோயிலில் தங்கியுள்ளனர்.

மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்துள்ளதால் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரணை இலுப்பைக்குளம், கல்மடு ஆகிய பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்று தெரியவந்தது. (இ-3-150)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன் புலிகளின் தாக்குதல் அதிகரிக்கலாம்

### தகவல் கிடைத்திருப்பதாக பொலீஸார் தெரிவிப்பு

இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பு புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் எனத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

ஏப்ரல் 19 ஆம் திகதி 'ஈழப்போர் 3' ஆரம்பமாகி நிறைவுநாள் வருவதால் எதுவும் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

புலிகள் தமது தாக்குதல்களை வடக்கு— கிழக்கிற்கு [illegible] வேறு இடங்களிலும் மேற்கொள்ளலாம் எனவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### முச்சந்தி முரளி



அப்ப கைமாற திசையும் மாறுது போல...!

## தமிழ்கட்சிகள் ஐ. தே. கவை சந்திக்கும்

கொழும்பு, பெப். 9

ஐந்து தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி ஐ. தே. கவின் நல்லெண்ணத் தூதுக்குழுவுடன் பேச்சு நடத்தவிருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கலில் உள்ள முக்கிய அம்சங்கள் குறித்து இப்பேச்சில் ஆராயப்படும். (இ-3-150)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கைது!

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, பெப். 9

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முன்னாள் விரிவுரையாளர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு ஹூணுப்பிட்டி கங்காராம விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் கடந்த மாதம் 31 ஆம் திகதி சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்த இராஜரத்தினம் கேதீஸ்வரி என்ற பெண்ணுக்கு இவர் கொழும்பில் தங்குமிட வசதிகளை வழங்கினார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் சந்தேகத்திற்கிடமான ஓர் இடத்தில் இருந்தவேளையில் இந்த முன்னாள் விரிவுரையாளர் கைது செய்யப்பட்டார் எனவும்—

அவரிடம் 4 தமிழ் இளைஞர்களின் தேசிய அடையாள அட்டைகள் இருந்தன எனவும் — அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது. எனினும் கைதானவரின் பெயர் தெரிவிக்கப்படவில்லை. (இ-10)

## இணுவில் - வரணி பகுதிகளில் தாக்குதல் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், பெப். 9

இணுவில், காங்கேசன்துறை வீதியில் நேற்றுக் காலை கிளைமோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

குண்டுச் சத்தம் ஒன்று கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் கிளைமோர் தாக்குதலில் சில படையினர் இறந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் சேத விவரம் எதுவும் உறுதியாகத் தெரிய வரவில்லை.

அதே சமயம் நேற்று முன்தினம் காலை வரணிப் பகுதியிலும் தாக்குதல் சம்பவம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் இன்று மீண்டும் வருகிறார்

### இனப் பிரச்சினை குறித்துப் பேச்சு

கொழும்பு, பெப். 9

பிரிட்டிஷ் வெளிநாட்டு தூதுவர்கள், பொதுநலவாயத் திணைக்கள பிரதி அமைச்சர் லிம் பொக்ஸ் இன்று மீண்டும் இலங்கைக்கு வருகிறார்.

ஏற்கனவே கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி இவர் இலங்கை வந்தது தெரிந்ததே.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியாக அவர்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி



கலாநிதி

## ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

(இந்துமத குரு பீடாதிபதி, நாயன்மார்கட்டு)

அவர்களுக்கு

**எமது இதய அஞ்சலிகள்**

அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

சங்கானை இளுப்பத்தால் முருகமூர்த்தி
தேவஸ்தான தருமகர்த்தாக்கள்

அ. க. சண்முகதாசன்,
அ. பொ. செல்வநாயகம்.

(45179)

## பருத்தித்துறை ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், பெப். 9

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான பெப்ரவரி ஒய்வூதிய வவுச்சர்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

ஒய்வூதியக் கொடுப்பனவு வேலைகள் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் இக்கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் கணனிமயப்படுத்தப்பட்டு, வழங்கப்படுகிறது.

பெப்ரவரி மாத ஒய்வூதியத்தை நாளை மறுதினம் 11 ஆம் திகதி முதல் வங்கிகளில் பெறலாம் என பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 9

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள ''சமூக மேம்பாடும் விழுமியங்களும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் உடுவில் பிரதேச செயலர் மகாலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும். கலாநிதி சபாஜெயராஜா, எஸ். சக்திவேல், கலாநிதி ஞானகுமாரன் ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துகளை பரிமாறவுள்ளனர்.

கருத்தரங்கில் இளைஞர் வள நிலைய அங்கத்தவர்கள் பங்குபற்றவுள்ளனர். (வி)

# பூமி புத்திர சார்பில் பிக்குகளும் தேர்தலில்!

கொழும்பு, பெப். 9

கம்பஹா மாவட்டம் அளவை பிரதேச சபைக்கு சிறிலங்கா பூமி புத்திரக் கட்சி போட்டியிடுகிறது. இக்கட்சிக்கு விமானச் சின்னம் தேர்தல் ஆணையாளரால் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்சியின் சார்பில் வேட்பு மனு கடந்த புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் வேட்பாளர் பட்டியலில் மூன்று பௌத்த பிக்குகளும் அடங்கியுள்ளனர். (ஐ-10)

# மரண அறிவித்தல்கள்

## “ கலாநிதி ” ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

இலங்கை இந்து மத குரு பீடாதிபதி, சிவாகம ஞானி, அருள் ஜோதி, வித்யாஸாகரம் நாயன்மார் கட்டு கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் 6-2-97 அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கௌரியம்மா மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், சாம். சண்முகநாதக் குருக்கள் [லண்டன்], சாம். தணிகாசலேஸ்வரக் குருக்கள் [தென் ஆபிரிக்கா], சாம் கணேசக் குருக்கள் [முல்லைத்தீவு], சாம். சோமாஸ்கந்த சர்மா [மலேசியா], சாம். செந்தில் நாதக் குருக்கள் [விவேகானந்த மேடு, கொழும்பு], கலாநிதி ‘ஐயப்பதாஸன்’ சாம். சரவணபவக் குருக்கள் [சாஸ்தாபீடம், கொழும்பு], சாம். ஜெகதீஸ்வரக் குருக்கள் [மல்லாகம்], சாம். அகிலாண்டேஸ்வரக் குருக்கள் [கொழும்பு], ஜெகதாம்பாள், விஜயலக்ஷ்மி, கனகாம்பிகை, தேவமனோகரி, பங்கஜவல்லி, பிரகதாம்பாள், நித்தியலக்ஷ்மி, ஸ்ரீசரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 9-2-97 இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு இல. 90/22 ஜோசேப் டயஸ் மாவத்த, புளூமென்டால் றோட், கொழும்பு-15 இல் உள்ள ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மாதம்பிட்டிய இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ. சிவ. நித்தியானந்தக் குருக்கள்
(மருமகன்)
விஜயலக்ஷ்மி
(மகள்)

சங்கானை. (45180)

## திருமதி கந்தையா வள்ளியம்மை

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா வள்ளியம்மை 06-02-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், திருமதி கனகம்மா, வல்லிபுரம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) செல்வி சரஸ்வதி (ஆசிரியை, மீசாலை, விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், க. வல்லிபுரம் (ஓய்வு பெற்ற F.A.) அவர்களின் மாமியாரும், அன்பரசி (ஆசிரியை, கொழும்பு) அவர்களின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07-02-97 இல் மீசாலையில் நடைபெற்றன.

தகவல்;
செல்வி சரஸ்வதி கந்தையா
(யோகம்மா) (மகள்)

மீசாலை. (சி/101)

## வயித்திலிங்கம் ஸ்ரீநிவாசன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் ஸ்ரீநிவாசன் 07-02-1997 இல் அகாலமரணமானார்.

அன்னார் ஜெயபூரணதேவியின் அன்புக் கணவரும், சிறிதர் (கனடா), சிறிராம் (வவுனியா), சிறிஜெயந்தி, சிறிதர்சினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், சிவகுமாரனின் (உரிமையாளர் ‘சுந்தர்சன்’) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09 - 02 - 1997 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சிவகுமாரன்

‘சுந்தர்சன்’
அதிகாரி செல்லமுத்து வீதி,
மானிப்பாய். (45192)

## சிவப்பிரகாசம் பஞ்சராசா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட தட்டுவம் கொட்டி தோட்டச் சுப்பிரிண்டன் திரு. சிவப்பிரகாசம் பஞ்சராசா 08 - 02 - 97 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09 - 02 - 97 இன்று பிற்பகல் 2-00 மணிக்கு புலோப்பளை, பளையில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(9264)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரணக் கிரியை அழைப்பும்

அன்னை மடியில்: 24 — 8 — 1924



ஆண்டவன் அடியில்: 10 — 1 — 1997

## அமரர் மாசிலாமணி சிங்கைஆரியரத்தினம்

| | | |
|---|---|---|
| கணவர் | : | கு. சிங்கைஆரியரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) |
| மகள்மார் | : | திருமதி பத்மராணி குகானந்தன் (பல்வைத்தியர்—அரசினர் வைத்தியசாலை, மந்திகை) |
| | | செல்வி இந்திராணி சிங்கைஆரியரத்தினம் (ஆசிரியை அச்சுவேலி ம. வித்தியாலயம்) |
| | | செல்வி உமாராணி சிங்கைஆரியரத்தினம் |
| மருமகன் | : | கு. குகானந்தன் (பசறை த. ம. வி.) |
| பெறாமகள்மார் | : | திருமதி நகுலேஸ்வரி சிவபாதசுந்தரம் |
| | | திருமதி இராசேஸ்வரி சிவகுருநாதன் |
| மருமகன் | : | கணபதிப்பிள்ளை சிவகுருநாதன் (துவாரகா வெதுப்பகம், நவிண்டில்) மற்றும் |

பேரப்பிள்ளைகள், சகோதரிகள், அயலவர்கள். நினைவுகூருகின்றார்கள்.

அன்பு அன்னையின் ஆத்ம சாந்திக்காக சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (9-2-97) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: கு. குகானந்தன்

இலகடி, பருத்தித்துறை வீதி,
அல்வாய் கிழக்கு. (45189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

09 - 02 - 1997

## ஆலய பூசையும் வழிபாடும்

மக்களின் செயற்பாடுகளுக்கேற்ப நல்வினை தீவினைகளை அனுபவிக்கும் பொருட்டே இறைவன் இவ்வுடம்பைக் கொடுத்துள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிடவற்றுள் வீடு (மோக்ஷம்) அடைவதே குறிக்கோளாக கொண்டு சிவாகம நூல்களில் கூறியவாறு பூசை முறைகளை நாம் செய்ய வேண்டும்.

சிவாகம முறைப்படி ஆலயங்களில் நித்திய, நைமித்திய, காமிய பூசைகள் நடைபெறுகின்றன. நித்திய பூசையில் ஆறுகால பூசை முதன்மையானது.

உஷக்காலம், காலசந்தி, உச்சிக்காலம், பிரதோஷ காலம், சாயங்காலம், அர்த்தயாமம் என அவை ஆறு வகைப்படும்.

சந்தனம், பழம், புஷ்பம், அன்னம் போன்றவை பிருதுவி உபசாரம் எனவும், திருமஞ்சணம், பால், தயிர், நெய் முதலியன அப்புவுபசாரம் எனவும், இரத்தினம், கற்பூரம், அக்னி ஆகியன தேயு உபசாரம் எனவும், தூபம், சாமரை, விசிறி, முதலியன வாயுவுபசாரம் எனவும், மணி, தோத்திரம், வாத்தியம் முதலியன ஆகாச

(5 ஆம் பக்கம் பார்க்க)

சிவஸ்ரீ.
**வை. சோமாஸ்கந்தகுருக்கள்**
(தேவஸ்தான பிரதான குரு)

## 33 குண்ட கும்பாபிஷேகத்தின் எண்ணிலாப் பெறுபேறு

சாதாரணமாக கோயில்களில் நடத்தப்படுகின்ற சாந்தி முறைகளால் மக்களுக்கு பெரும் ஆறுதலும், சுபீட்சமும் கிடைக்கின்றது. மஹா கும்பாபிஷேகம் என்பது பெரும் சாந்தியாகும். இதன் மூலம் எல்லா உயிர்களுக்கும் அளவிலா நன்மைகளும், சுபீட்சங்களும் கிடைக்க வழி ஏற்படுகிறது.

கும்பாபிஷேகங்கள் ஒரு குண்டத்துடனும், ஐந்து, ஒன்பது, பதினேழு, இருபத்தைந்து, முப்பத்து மூன்று குண்டங்களுடனும் நடத்த ஆகமங்கள் விரிவாக்கிக் கூறி இருக்கின்றன.

இவற்றுள் முப்பத்து மூன்று குண்டங்களோடு நடத்தப்படுகின்ற கும்பாபிஷேகமே உத்தமோத்தம மஹா கும்பாபிஷேகம் எனப் புகழப்படுகின்றது.

இதற்கு யாக சாலையில் நூறு தூண்கள் அல்லது கால்கள் இருக்க வேண்டும். இதில் நூறு ருத்ரர்கள் சான்னித்யமாக்கப்படுவார்கள்.

இந்த உலகத்தில் நாம் ஒன்றி வாழ்கின்ற சிவதத்துவம் முதல் பிருதுவீ தத்துவம் வரையான 36 தத்துவங்களும், நிலம், நீர், காற்று, ஆகாயம், அக்னி, சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய நமக்கு இன்றியமையாதவையெல்லாம் இறைவனுடைய திருமேனிகளாக (மூர்த்திகளாக) வும், அவர்களுடைய சக்திகளாகவும் உருப்பெறச்செய்து இந்த முப்பத்து மூன்று குண்டங்களிலும் விரிவாக ஆகுதிகள் கொடுக்கப்பெற்று மந்திர பலமுள்ளவர்களாக்கப் படுகின்றனர்.

இக் கும்பாபிஷேகத்தில் திருவருட்சக்தி நிரம்ப பிம்பத்தில் சான்னித்யமாக்கப்பட்டு அது பக்தர்களுக்கு அடுத்த கும்பாபிஷேகம்வரை எண்ணிலாப் பேறுகளை வழங்க கூட்டிவைக்கப்படுகிறது.

இதுவே 33 குண்டகும்பாபிஷேகத்தின் பெறுபேறாகும்.

**சிவ ஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்**
**- காயத்ரீபீடம், இணுவில்-**

## கும்பாபிஷேகமகத்துவம்

ஆன்மாக்களின் வினைகளை அறுத்து பேரின்ப வாழ்வுக்கு இட்டுச் செல்வன ஆலயங்கள்.

ஆலயம் என்பது கோபுரம், திருமதில், திருச்சுற்று ஆகிய வரையறைகளை உடையதாய் இடவரம்புக்குட்பட்டிருத்தல் அவசியம்.

புதிய ஆலயங்கள் அமைத்தலும், ஆலயங்கள் பழுதடையும் போது அவற்றை திருப்பணிகள் செய்து மீளப் புதுப்பித்தலும் சைவ மக்களின் பண்பாடு.

இத்தகைய திருப்பணிகளைத் தொடர்ந்து உருவாகும் ஆலயத்தில் ஸ்தாபிக்கப்படும் பிம்பத்தில் தெய்வீகம் கொண்டருள வேண்டும் வண்ணம் இறைவனை வேண்டி நிகழ்த்தப்படுவதே கும்பாபிஷேகம் ஆகும்.

கும்பாபிஷேக காரியங்களில் ஈடுபடுவதும், உதவுவதும், பங்கு கொள்வதும், தரிசிப்பதுங்கூட சிறந்த பேற்றினைத்தரும் சிவ புண்ணிய செயல்களாகும்.

கோயில் வழிபாட்டு முறையில் கும்பாபிஷேகம் முக்கியத்துவம் பெற்ற கிரியையாகும்.

நித்திய கிரியைகளில் ஏற்படும் குறையினைப் போக்க நைமித்திய கிரியைகளும், நைமித்திய கிரிலயகளில் ஏற்படும் குறையினைப் போக்க பெரும் சாந்தியாக கோயில்களிலே கும்பாபிஷேகம் நிகழ்கின்றன.

கும்பாபிஷேக சாதனங்களுள் மண்டபம், கலசங்கள், குண்டங்கள், நெய், சமித்து, தானியம், அன்னம், நைவேத்தியம் போன்றவை பிரதானமானவை.

பஞ்ச பூதங்களான விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேக கிரியைகளின் உயர் நிலையைக் குறிக்கின்றன.

கும்பாபிஷேகத்தின் பின் இறைவனுக்கென நடத்தப்படும் உபசாரங்களும் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றனவும் ஐம்பூத ஆக்கமாக விளங்குகின்றன.

கும்பாபிஷேகத்தின் பின் அதன் பலன்களை அடையும் பொருட்டு ஒரு மண்டலம் (45 நாள்கள்) காலம் மண்டலாபிஷேகம் செய்யப்பட வேண்டும்.

கும்பாபிஷேகம், மகாபிஷேகம் ஆகியவற்றால் தெய்வீகப் பொலிவு பெற்ற கோயில்களில் நித்திய பூசைகள் தடங்கலின்றி நடத்தப்பட்டால் தான் கும்பாபிஷேகத்தினால் எமக்கு பூரணமான பலன் கிடைக்கும்.

**- பூரணன்**



## அருள் பெறுவோம்

ஒரு கோட்டன், இருசெவியன், மும்மதத்தன், நால்வாய், ஐங்கரத்தான் ஆகிய பெருமானுக்கு இணுவிலிலே இன்று கும்பாபிஷேகம்.

இணுவிலிலே ஆலயம் அமைத்து ஐங்கரத்தானை பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றியவன் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகர மன்னன்.

ஆரியச் சக்கரவர்த்திகள் மரபில் பதினோராம் தலைமுறையைச்சார்ந்த இம் மன்னன், உதாரகுணசீலன், நற்றமிழ் வல்ல நாவலரும் பாவலரும் போற்ற அரசாண்டவன்.

இம் மன்னனால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற பெருமானுக்கு ''ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்'' என்ற திருநாமம் வழங்கலாயிற்று.

இக்கோயில் இற்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன் பரராசசேகரன் என்ற தமிழ் அரசனால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், பின்னர் அது போர்த்துக்கீசர்களால் இடிக்கப்பட்டதாகவும் வரலாறு.

சிவமயமாய் விளங்கும் இறைவனின் வேறாகாத திருவருட் சக்தியே விநாயகர். ஓங்காரவடிவினர்.

இந்த ஓங்கார வடிவினன்—தனக்கென ஒரு தலைவன் இல்லாத முழு முதல்வன்.

பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகப் பெருமானுக்கு இணுவில் மக்கள் 12 ஆண்டுகளுக்கொருமுறை கும்பாபிஷேகம் நிகழ்த்தி பெருமையும் மகிழ்வும் கொள்கின்றனர்.

சைவாபிமானிகளாகிய நாம் தாதுவருஷம் தைமாதம் 27 ஆம் நாள் (09-02-1997) ஞாயிற்றுக் கிழமையாகிய இன்று ஸ்ரீவிநாயகப்பெருமான் ஆலயத்தில் வேதபாரங்கதர்களாகிய பிராமணோத்தமர்களால் நடத்தப்படுகின்ற கிரியைகளையும், கும்பாபிஷேக விழா சிறப்பினையும் கண்டு, ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரின் அருள்பெற்று இகபர சுகங்களைப் பெற்று வாழ்வோமாக.

**ஸ்ரீமான் வை. கதிர்காமநாதன்**

மலர் அமைப்பு:

**வி. பரிபூரணானந்த சர்மா**

**வலிகாமம் தெற்கு உதயன் செய்தியாளர்.**

உ

## இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அந்தாதிக் கீர்த்தனைகள்

(1) ராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

பல்லவி

அருளுவான் ஆனைமுகத்தையன் - என்றும்
திருத்திகழ் இணுவையில்
தும் பிக் கையன் மெய்யன்

அனுபல்லவி

பரராஜசேகரப் பிள்ளையார் பதமே
இரவொடு பகலும் என்றும் துதிமனமே

சரணம்

மங்கள வாழ்வு மாதங்கன் தருவான்
எங்களுக்கெல்லாம் இன்பமே யருள்வான்
பொங்கும் சதுர்த்தியிலே பவனியும் வருவான்
மங்கள ரூபன் எமக்கெல்லாம் மகிழ்ந்தே அமர்வான்

(2) ராகம்: காமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

கணபதிதுணை அருள்வான் - என்றும்
இணை மலரடியருள் இகத்தினில் தருவான்

அனுபல்லவி

மணமலர்ச் சோலை மருவும் இணுவையிலே
குணபதி கோபுரக் கோயில் கொண்ட பரராஜக்...

சரணம்

பரராஜசேகரக் கணேசன் - என்றும்
பரிந்தருள் தரும் ஆத்மநேயன்
ஸ்வரராக கீத நாத வேதன் வாரணன்
சுபமங்களம் அருளும் பூரணன்

(3) ராகம்: துவஜாவந்தி தாளம்: ஆதி

பல்லவி

கணேசன் புகழ் பாடுவாய் — மனமே
இணுவில் பரராஜசேகரக் கணபதி...

அனுபல்லவி

இணையில்லா அருட் கோலம்
இனித்திடக் கொண்டவன்
மணமலர் ஆத்தி சூடும்
மாதங்கன் மதங்கமுகன்

சரணம்

பஞ்சமுகத்தானை பணிந்திடுவாய்—மனமே
குஞ்சரக் கணபதி குதூகலம் தருபவன்
தஞ்சமென்றே கஜானின் தாளைப்பிடித்திடுவாய்
அஞ்சல் என அருளி அனைத்தும் தருவான் செம்மல்

(4) ராகம்: பெலஹரி தாளம்: ஆதி

பல்லவி

அள்ளி அருள் தரும் ஆனைமுகன் இணுவை
தெள்ளு தமிழ் பரராஜ விநாயகன்

அனுபல்லவி

உள்ளமெனும் அரங்கில் உவந்து நடனம் செய்வான்
வள்ளல் அருள் நிறைந்த வாரணன்பூரணன்

சரணம்

கதிநீயே பரராஜக் கணபதி என்றடைந்தால்
மதிசூடும் அரண் மைந்தன் மாதங்கன் வந்தருள்வான்
பதியான இணுவையூர்ப் பரராஜசேகரன்
அதியானந்தம் தந்தே ஆட்கொள்வான் ஐங்கரன்

**இயலிசை வாரிதி யாழ்ப்பாணம் ந. வீரமணிஐயர்**

## முன்னவனே இரட்சிப்பாயே!

அன்னை தந்தை இருவருமே உலகமென்று
அன்புடனே சுற்றிவந்து கனியும் பெற்றாய்
மன்னுயிர்கள் கற்றுணர்ந்து வாழ வென்றே
மலர்க்கையால் பாரதத்தை எழுதிவைத்தாய்
- தன்
பின்னவனாம் குமரனுக்குப் பெண்ணைச் சேர்க்க
பெருங்கரியாய் உருவெடுத்துச் சென்றுசேர்த்தாய்
சின்னவனாம் . நம்பியின்மேல் கருணை செய்தே
சீரானகல்வி தந்து அருளும்தந்தாய்
நின்னடியைப் போற்றி அவ்வை பூசைசெய்ய
நீள் துதிக்கையால் அவளைக் கயிலை சேர்த்தாய்
மன்னன் பரராசசேகரனும் பணிந்து வேண்ட
மாண்புறவே இணுவைவந்து கோயில்கொண்டாய்
பொன்பொருளும் கல்வி செல்வம் புகழும்தந்து
பூதலத்தில் ஏற்றமிகு வாழ்வும்தந்தாய்
முன்னவனே உனை என்றும் போற்றி வாழ்வோம்
- எம்மை
மூஷிகத்தில் ஏறிவந்து இரட்சிப்பாயே

**வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்**
**இணுவில்**

(விளம்பர இல. சி-98)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு எதிரான அடக்குமுறை ஹிட்லர் ஆட்சியில்கூட காணாதது

## நாடாளுமன்றத்தில் அஸ்வர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

உலகில் ஹிட்லர் ஆட்சியில் கூட இடம்பெற்றிராத அடக்குமுறை இன்று இங்கே தமிழினத்துக்கு எதிராக நடைபெறுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சூரியன் உதிக்கையிலே வெண்புறாவை ஏந்தி வந்து கூறிய நயவஞ்சக வார்த்தைகளை நம்பிய தமிழர்கள் ஏமாற்றப்பட்டு விட்டனர்.

பதவி உயர்வு, பணம் போன்ற காரணங்களுக்காக நள்ளிரவுகளில் தமிழ் மக்களின் வீடுகள் சோதனையிடப்படுகின்றன. இது சர்வதேச ரீதியாக அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகும்.

வவுனியாவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஒன்றரை மாதம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின்பின் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டோர் மீண்டும் வேறோர் இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இது எப்படி நியாயமாகும்? இத்தகைய அர்த்தமற்ற கைதுகளை நிறுத்துங்கள்.

தமிழ் மக்களுக்கு தொடர்ந்து துன்பதுயரங்களைக் கொடுத்துவிட்டு பின்னர் எதைக் கொடுத்தாலும் அரசாங்கம் அவர்களது துயரைத் துடைத்துவிட முடியாது.

தமிழ் மக்கள் அமைதியகா வாழ்வதற்கு அரசு வழிகண்டாக வேண்டும் — என்றார் அஸ்வர்.

(ஐ-5)

# சமய,சமூக நலனுக்காக எதையும் செய்யத் துணிபவர் இராசேந்திரன்

சமூக ஜோதி சிவ. இராசேந்திரன் அமரராகி ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது.

மருதடி விநாயகனும், வேலக்கைப் பிள்ளையாரும், அழகுற அமர்ந்து அருளாட்சி நடத்தும் மானிப்பாய்ப் பட்டணத்துக்கு பெருமை தேடித்தந்த வரலாற்றுப் புகழ் பெற்ற சான்றோர்கள் வரிசையில், இருபதாம் நூற்றாண்டின் மூன்றிலொரு பங்குக் காலம் வனப்புடன் வாழ்ந்த பெருந்தகை, மானியம்பதியின் மூத்த குடிமகன், சட்டத்தரணி, சமாதான நீதிபதி, அமரர் சிவக்கொழுந்து இராசேந்திரன் அவர்களும் ஒருவராவர்.

அவர் ஒரு பழுத்த அனுபவசாலி. சட்டத்துறையில் மட்டும் அவருடைய அனுபவமும் அறிவாற்றலும் முடங்கிவிடவில்லை. அவர் நேர்மையுடையவர். காட்சிக்கு எளியவர். கடுஞ் சொல் பேணாதவர். அபிமானத்திற்கும் மதிப்பிற்கும் உரியவராக விளங்கியவர் மட்டுமன்றி ஓர் ஏழை பங்காளனுமாவார்.

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் தர்மகர்த்தாவாகவிருந்து நலத்தகு சேவையாற்றிய நல்லவர். தனிப்பட்ட வாழ்விலும், பொதுவாழ்விலும் பல சீரிய நெறிகளை மிக இறுக்கமாகக் கொண்டு சமய பக்தி மிகுந்தவராய்த் திகழ்ந்தார்.

பேச்சளவில் நின்று விடாது எதையும் செயலில் செய்து காட்டிய கர்ம யோகியுமாவார். நூற்றாண்டு விழாக் கண்ட யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் நிர்வாக உறுப்பினராய், தலைவராய், சட்ட ஆலோசகராய், பல வருடங்கள் பணியாற்றிச் சபை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த தியாகச் செம்மல்.

சைவமும் தமிழும் தம் இரு கண்களாகப்போற்றி வாழ்ந்த பெரியாரின் மறைவு இன்றைய கால கட்டத்தில் ஒரு பெரும் இழப்பாகும். மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஓர் உயிர்த்துடிப்புள்ள அங்கத்தவராக இறுதிவரை செயற்பட்டார். மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகிய இரு கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு உழைத்த பெருமை இவருக்குரியது.

மானிப்பாய்ப் பட்டணத்தைப் பிரதிநிதிப்படுத்தி அமரர் இராசேந்திரன் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் மானிப்பாய் பட்டிண சபையின் தலைவராகப் பதவி வகித்து சிறப்புறு சேவையாற்றியதோடமையாது,



தென்மேற்கு பிரதேச சபையின் தலைவராகவும் கடமையாற்றி மக்கள் மனதில் இடம் கொண்டவர். சிந்தித்துப் பணியாற்றும் வல்லமை படைத்தவர்.

நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் எவரையும் எதிர்த்து ஈற்றில் அவர்களது மதிப்பைப் பெறுவதே இவரது தனித்தன்மையான சுபாவம் தமது சமூகத்தின் நலத்துக்காக, வெற்றிக்காக, மீட்சிக்காக சகலதையும் செய்வதற்குத் துணிந்து நின்ற செயல் வீரர்.

புராண படன விற்பன்னர், திருமுறை ஓதுவார், சமய விரிவுரையாளர் ஆகியோரை வேலக்கைப் பிள்ளையார் கோயிலில் நிகழ்ச்சியில் பங்குபெறச் செய்து சன்மானம் வழங்கி அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து உறுதுணையாக விளங்கிய அமரர் இராசேந்திரன் அவர்களின் பணி என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும்.

சமய விழாவோ, அல்லது தமிழ் விழாவோ எங்கே நடந்தாலும் அங்கு காட்சி தருவார். என்ன உதவி செய்ய வேண்டும் என வலிந்து கேட்டு ஆவன செய்யும் அரிய செம்மல்.

## நீத்தார் நயப்புரை

நாட்டின் நிலைமை காரணமாக இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் வசிக்க நேரிட்ட போதிலும் தமது பணிகளைச் செய்ய வேண்டும் என்ற இளம் உள்ளத்துடிப்புடனேயே காணப்பட்டார். அண்மையில் உள்ள விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற கந்தபுராண படனத்தில் தவறாது பங்கு பற்றிப் பொருள் கூறுவார்.

இலக்கண அமைதியும், பொருள் வளமும் அவரது உரையில் தெறிக்கும். திருமுறைகளைக் கனிந்த குரலில் சிறந்த பொருள் தொனிக்க ஓதுவது அவரது இயல்பாகும்.

இறுதி நேரத்திலும் மறுநாள் கந்தபுராணத்துக்குப் பொருள் சொல்வதற்குரிய ஆயத்தங்களை இரவு செய்தார். மறுநாள் காலை நோய் வாய்ப்பட்டார். அன்று மாலை சிவபதம் அடைந்தார்.

அவருடைய இறுதி மூச்சும் தெய்வபணியுடன் நிறைவெய்தியதென்றால் அமரர் சிவ. இராசேந்திரன் அவர்களின் தெய்வீக நாட்டத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

சைவப்புலவர்
வ. கந்தசாமி.

# திறந்த பல்கலைக் கழகத்தின் கிளை நிலையம் பருத்தித்துறையில்

வடமராட்சி, பெப். 9

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம் யாழ், பல்கலைக்கழகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. இதன் கிளை நிலையம் ஒன்று பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் செயற்படத் தொடங்கியுள்ளது.

ஆங்கிலம், முகாமைத்துவம், பட்ட மேற்கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளைப் பயில விரும்பும் மாணவர்கள் உடனடியாக பிராந்திய நிலையத்தில் அல்லது கிளை நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு பிராந்திய இயக்குனர் திரு. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

திறந்த பல்கலைக்கழக பட்ட மேற்கல்வி டிப்ளோமா மாணவருக்கான பரீட்சை இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருக்கிறது.

(ஐ-173)


## விற்பனைக்கு உண்டு

அடையாளஅட்டை லெமனேட்டிங் பிலிம், றேடியோ, வீடியோ, ஓடியோ கசட், பிலிம்றோல், பற்றறி வகை போட்டோ பிரதி, ரோனர் No, 120X125X150X155X 1215X 2020 X 2120. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வம் களஞ்சியம்
இல. 330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(45048)



## வாழ்த்துகின்றோம்

யாழ். கல்வி வலயம் - Iஇன் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றிருக்கும்

திரு. சு. இரத்தினராசா
(B. A. (Cey.), Dip - in - Ed., S. L E. A. S.

அவர்களைப் பாராட்டி அவரின் பணி மேலும் சிறந்து நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு. எஸ். என். விஸ்வலிங்கம் L. L. B. (Cey.),
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் சத்தியப்பிரமாண ஆணையாளரும்.

திருமதி சி. விஸ்வலிங்கம்
B. A. (Cey.), Dip-in-Ed. S. L. P. S. I

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்
(45188)



## கண்ணீர் அஞ்சலி

மறைந்த அகில இலங்கை இந்துமத குருபீடாதிபதியும், நாயன்மார்கட்டு ஆதிபைரவர் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரபல மாந்திரிக பூசணமும், நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு, வைத்தியசாலையின் ஆயுர் வேத, வேதாகம சோதிட திருநீத்திற ஞான விற்பன்னருமாகிய

சிவஸ்ரீ க. சாம்பசிவசிவாச்சாரியார்

அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வைத்தியகலாநிதி ஏ. உமாகாந்தனும்,
சக ஊழியரும்.
[நாயன்மார்கட்டு. முறிவு நெரிவு வைத்தியசாலை]
(45151)



## இலங்கை வங்கி அறிவித்தல்

இதுவரை யாழ்நகரில் இயங்கி வந்த எமது மானிப்பாய்க் கிளை வாடிக்கையாளரின் நன்மை கருதி 10-02-97 திங்கட்கிழமை தொடக்கம் மானிப்பாயில் முன்பிருந்த கட்டடத்தில் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

பிரதேச முகாமையாளர்,
யாழ். பிரதேசம்.
(சி/100)



SERVICES IN MEDICAL LABORATORY PHARMACY
Commencing from
10 FEB. 1997
BIO TEC INTERNATIONAL (PVT ) LTD.
234, Ramanathan Road,
Thirunelveli, Jaffna.

மருத்துவ ஆய்வுகூட மருந்தக சேவைகள்
தொடக்கம்:
10 பெப். 1997
ப(B)யோ ரெக்
இன்ரநாசனல் (பிறை.) லிமிட்.
234, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(45179)



## தேவை

பாடசாலை ரைஸ் (Ties) மற்றும் டிசைன்கள் வரைவதற்கும்,(Artist),பிறின்ரிங் செய்வதற்கும் பெண்பிள்ளைகள் தேவை.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
42, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(9258)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸயரில் வெளிநாட்டுப் படைகளை விலகுமாறு ஐ. நா. வேண்டுகோள்

## கிளர்ச்சிக்காரர்களுடன் சண்டை தொடர்கிறது

கின்ஷாசா, பெப். 9

ஸயர் நாட்டில் தங்கள் பகைநடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி விடுமாறும், கூலிப்படைகள் உட்பட எல்லா வெளிநாட்டுப் படையினரும் அங்கிருந்து வெளியேறுமாறும் ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது.

கிழக்கு ஸயரில் உள்ளூர் கிளர்ச்சிப் படைகளுடன் இணைந்து புறூண்டி, றுவாண்டா, உகண்டா ஆகிய நாடுகளின் படைகளும் சண்டையிடுவதாக ஸயர் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை ஸயரில் சண்டை தொடர்ந்து நடைபெறுகிறது.

கடந்த வெள்ளியன்று நடந்த சண்டையில் மட்டும் எண்ணூறு கிளர்ச்சிப்படையினர் கொல்லப்பட்டதாக ஸயர் தெரிவித்துள்ளது.

இதேவேளை —

கிழக்கு ஸயரில் டுட்ஸி தலைமையிலான கிளர்ச்சிக்காரர்களுக்கும் ஸயர் இராணுவப் படைகளுக்கும் இடையிலான சண்டையில் இருந்து விலகி இருக்குமாறு உகண்டா, றுவாண்டா, புருண்டி ஆகிய நாடுகளை அமெரிக்கா கேட்டிருக்கிறது.

ஸயரின் அண்டை நாடுகளை சண்டையில் சம்பந்தப்படாமல் இருக்கும்படி அமெரிக்கா கேட்டுக் கொண்டிருக்கிறது. என அமெரிக்க வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

பல நூற்றாண்டுகளாக ஸயரில் வாழ்ந்த தங்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்டு றுவாண்டாவுக்கு வெளியேறுமாறு ஸயர் அரசு நிர்ப்பந்தித்ததை அடுத்து கடந்த ஒக்ரோபர் மாதம் கிளர்ச்சிக்காரர்கள் கலகத்தில் இறங்கினர். (ஐ-10)

# 23 பலஸ்தீன பெண் கைதிகளை இஸ்ரேல் மன்னித்து விடுதலை

## ஆனால் இருவரை விடுவிக்க மறுப்பு

ஜெருசலேம், பெப். 9

இஸ்ரேலில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 23 பலஸ்தீனப் பெண் கைதிகள் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு அடுத்தவாரம் விடுவிக்கப்படுவார்கள் என இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

ஆனால் இஸ்ரேலுக்கு எதிராக பயங்கரவாதத்தாக்குதலை நடத்திய இரண்டு பெண்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்படாவிட்டால் அவர்களுக்கு ஆதரவாக தாங்கள் சிறையிலேயே இருப்போம் என ஏனைய 23 பெண் கைதிகளும் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

# உலக அரங்கில்

## தங்கம் விலை வீழ்ச்சி

லண்டனில் தங்கத்தின் விலை கடந்த 4 ஆண்டுகளில் காணாத வீழ்ச்சி கண்டுள்ளது.

ஒரு கட்டத்தில் ஒரு அவுன்ஸ் தங்கம் 339 டொலருக்கு விற்கப்பட்டது.

அமெரிக்க டொலரின் மதிப்பு நாளுக்குநாள் ஏற்றமடையும் வேளையில் தங்கத்தின் விலை சரிந்துவருகிறது.

# ஐ. நாவுக்கான நிதிப் பாக்கியை செலுத்த அமெரிக்கா பின்னடிப்பு!

ஐ. நா. சபையின் சுற்றுப்புறச் சூழல் சூழல்துறை விவகாரம் மற்றும் அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கூட்டத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகள் ஐ. நா. சபைக்கு தாங்கள் செலுத்தவேண்டிய பாக்கியை செலுத்தமாட்டோம் என அடம்பிடித்ததை அடுத்தே கூட்டம் நிறுத்தப்பட்டது.

ஐ. நா. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவில் அமெரிக்காவின் அதிகாரம் ஓங்கும் வகையில் முன்வைத்த அமெரிக்காவின் திட்டத்தை ஏனைய நாடுகள் ஏற்க மறுத்தன. அதனை அடுத்தே அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் நிதி உதவியை அளிக்கமாட்டோம் என்று எச்சரித்துள்ளன. (ஐ-10)

# அமெரிக்க-ரஷ்ய அதிபர்கள் ஹெல்சிங்கியில் சந்திப்பர்!

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனும் ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்ஸினும் அடுத்த மாதம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்காவில் நடைபெறுதிப்பு யெல்ட்ஸினின் உடல்வதாக இருந்த இந்த சந்நிலை காரணமாக பின்லாந்து நாட்டின் ஹெல்சிங்கி நகருக்கு மாற்றப்பட்டுள்ளது.

இருதரப்பு நாடுகளுக்கு மிடையே ஆயுதக் குறைப்பு பற்றிய திட்டங்கள் இந்த சந்திப்பின் பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## உண்ணாவிரதம்

மொஸ்கோ, பெப். 9

1986 ஆம் ஆண்டு ரஷ்யாவில் செர்னோபில் அணுமின் நிலையத்தில் நேர்ந்த அணுக்கசிவின் போது துணிச்சலுடன் செயலாற்றி அணுக்கசிவை அகற்றிய தொழிலாளர்களில் 60 பேர் தமக்கு அளிக்கப்படவேண்டிய நஷ்டஈட்டை வழங்கக் கோரி உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர். (ஐ-10)

## விமானம்தப்பியது

பிரிட்டிஷ் விமான சேவைக்குச் சொந்தமான ''கொண்கோட்'' பயணிகள் விமானம் ஒன்று விபத்தில் இருந்து தப்பியுள்ளது.

இந்தஇராட்சதப்பயணிகள் விமானம் பறந்து கொண்டிருந்தபோது திடீரென இயந்திரக்கோளாறு ஏற்பட்டதால் அது கனடாவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

# விஜய கொலைக் குற்றச்சாட்டு; சந்திரிகாவின் தேர்தல் வேட்டு!

## சாடுகிறார் ஐ. தே. கவின் எம். பி.

கொழும்பு, பெப். 9

தமது கணவர் விஜகுமாரரணதுங்கவின் படுகொலையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோருக்கு தொடர்புகள் இருந்தன என்று ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் தெரிவித்த தகவலை ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி கருணசேன கொடித்துவக்கு நிராகரித்துள்ளார்.

பி. பி. சியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதியின் கூற்றை அவர் சாடியுள்ளார்.

பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

''இந்தப் படுகொலைக்கும் பிரேமதாசா, ரஞ்சன் விஜரத்தினா ஆகியோருக்கும் தொடர்புகள் இருந்ததாக ஜனாதிபதி சந்திரிகா கருதியிருந்தால் இந்தக் கருத்தை அவர் எப்போதோ தெரிவித்திருக்க வேண்டும். அவரது கணவரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற தகவல் கிடைத்ததும் அவரைக் கொன்றவர்கள் மீது, தனது கணவர் மேல் வைத்திருந்த பாசத்தின் வெளிப்பாடாக இந்தக் குற்றச்சாட்டை எப்போதோ தெரிவித்திருக்க வேண்டும். இப்போது இந்த விடயத்தை ஜனாதிபதி சந்திரிகா அரசியல் லாபம் பெறும் நோக்கில் பயன்படுத்த முனைகிறார்.

விஜய குமாரதுங்க படுகொலை செய்யப்பட்டபோது பிரேமதாசா ஜனாதிபதியாக இருக்கவில்லை. ரஞ்சன் விஜேரத்தினா பதில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கவில்லை; நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கவில்லை; அப்போது பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத் முதலியுமே பணியாற்றினர்.

தன்னை எதிர்த்து விஜய குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருந்ததாலேயே பிரேமதாசா விஜய குமாரதுங்கவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டு இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்தப் படுகொலை நடைபெற்ற வேளையில் ஐ. தே. கட்சியின் சார்பில் யார் போட்டியிடுவது என முடிவெடுக்கப்படவில்லை. ஐ. தே. கட்சியின் சார்பில் போட்டியிட 3 வேட்பாளர்களின் பெயர்கள் கட்சி மட்டத்தில் ஆராயப்பட்டுவந்தது. பிரேமதாசா, அத்துலத் முதலி, காமினி திசநாயகா ஆகியோரே அவர்கள். ஐ. தே. கட்சியின் சார்பில் யார் போட்டியிடுவது என்ற தெளிவற்ற நிலை நிலவிய வேளையிலேயே இந்தப் படுகொலை நிகழ்ந்துள்ளது.

தனது போட்டிவேட்பாளராக விஜய குமாரதுங்க போட்டியிடக் கூடும் என்பதற்காக அவரைக் கொல்லவேண்டிய தேவை எதுவும் பிரேமதாசாவுக்கு இருக்கவில்லை.

சிறிலங்காவில் நடைபெற்ற தேர்தல்களின் வரலாற்றை உற்றுநோக்கும்போது இடதுசாரி வேட்பாளர்கள் இருவர் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் முடிவு ஐ. தே. கட்சிக்கே சாதகமாக அமைந்தது.

சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு மேலதிகமாக விஜய குமாரதுங்கவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் பிரேமதாசா தேர்தலில் இலகுவாக வெற்றிபெற்றிருப்பார்.

ஐ. தே. கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதறிப் போகும் என்பதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எப்போதும் இடதுசாரிகளுடன் கூட்டு வைக்கிறது. தற்போதுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலும் அவர்கள் இணைந்துள்ளனர்.

அந்தத் தேர்தலில் விஜய குமாரதுங்க போட்டியிட்டிருந்தால்கூட பெரிய மாற்றங்கள் நிகழ்ந்திருக்காது. அவருக்குப் பதிலாகப் போட்டியிட்ட ஒசி அபேகுணவர்த்தன 3 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தார். விஜய குமாரரணதுங்க போட்டியிட்டிருந்தால் சுமார் 6 லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கலாம்.

மின்னேரியா இடைத்தேர்தலில் ஐ. தே. கட்சி, விஜய குமாரதுங்கவின் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன போட்டியிட்டன. அத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 3 இடங்களையே வென்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கட்சி, விஜய குமாரதுங்க மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய மும்முனைப் போட்டி ஏற்பட்டிருந்தால் சிறிமாவோ 3 ஆம் இடத்தையே பிடித்திருப்பார்.

அந்த ஜனாதிபதித் தேர்தலில் விஜய குமாரதுங்க போட்டியிட்டிருந்தால் அது பிரேமதாசாவுக்குகே சாதகமாக அமைந்திருக்கும். சிறிமாவுக்கு அது பாதகமாகவே அமைந்திருக்கும்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்து எந்தவொரு தர்க்கரீதியிலும் நிலைகொள்வதாக அமையவில்லை.

கடந்த பொதுத்தேர்தலின் போதும், ஜனாதிபதித் தேர்தலின் போதும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற முடியாத பொதுசன ஐக்கிய முன்னணி; தேர்தலில் வெற்றி பெற ஒரு தந்திரமாக விஜய குமாரரணதுங்கவின் படுகொலையைப் பயன்படுத்துகிறது. — என்று கூறினார். (ஐ-10)

## விலை சரிவு

சந்தைகளில் கறி உருளைக்கிழங்கின் விலை நாளாந்தம் குறைந்து வருகிறது.

கொழும்பில் இருந்து தனியார் வர்த்தகர்களுக்கு இரு கப்பல்களில் எடுத்துவரப்பட்ட கறி உருளைக்கிழங்கு இறக்கப்பட்டு வருவதனாலும்.

உள்ளூர் தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு சந்தைக்கு வரத் தொடங்கியிருப்பதனாலுமே இந்த விலைச்சரிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 90 ரூபாவாக விற்பனையாகிறது. (ஐ.173).

## திரை நீக்கம்

யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் அமரர் அகிலேசர் பொன்னம்பலத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும், உருவப்படத் திரை நீக்க வைபவமும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். செயலகத்தில் நடைபெறும்.

உருவப்படத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், திரு. செ. பத்மநாதன் திரைநீக்கம் செய்து வைப்பார் தொடர்ந்து நினைவஞ்சலி உரைகள் இடம்பெறும். (ஐ-4)

## ஜேர்மன் உதவி

யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புனர் வாழ்வு வேலைகளை மேற்கொள்வதற்காக 17 கோடியே 50 இலட்சம் ரூபாபெறுமதியான பொருள் உதவியை வழங்க ஜேர்மனி முன்வந்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக ஒரு கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை ஜேர்மன் தூதுவர் மைக்கல் ஸ்மித் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் கொழும்பிலுள்ள மகாவலி நிலையத்தில் கையளித்தார்.

யாழ்ப்பாணத்தில் வீடமைப்புக்காக ஜேர்மனி 50 இலட்சம் டொச்மார்க் பெறுமதியான பொருள் உதவியை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது என்றும் அமைச்சர் இந்த நிகழ்ச்சியில் கூறினார்.

## ஆலய பூசை . . .

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உபசாரம் எனவும் கொள்ளப்படும்.

இவ்வுபசார பூசை வழிபாடுகளால் ஆபத்துக்கள் நீங்கும்; பயம் விலகும்; பாவங்கள் அழிந்து புண்ணியம் வளரும்; அறியாமை நீங்கும்; திடீர் மரணங்கள் விலகும்.

கோயில் வழிபாட்டு முறையில் பிரதோஷ காலங்களில் நாம் முதலாவதாக இடபதேவரைத் தரிசித்து, அங்கிருந்து இடது பக்கமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து மீண்டும் திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து அங்கிருந்து வலப்புறமாகச் சென்று கோமுகியை கடவாது சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து பின் இடது பக்கமாகத் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து மீண்டும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசியாது கோமுகி வரை சென்று பின்னரும் திரும்பி வந்து இடபதேவரைத் தரியாது இடது பக்கமாகச் சென்று சண்டேஸ்வரைச் தரிசிக்க வேண்டும் பின்னர் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசிக்க வேண்டும்.

பிரதோஷ காலத்தில் இவ்வாறு வணங்குவதன் மூலம் இறை அருளைப் பெறலாம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9253)

நல்ல நிலையில் உள்ள 70 ஸ்ரீ லான்ட்மாஸ்ரர் புதிய பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சிவானந்தன் இல. 126/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (45120)

ஹொண்டா CD200, 82 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய நீல மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; ஆ. இரட்னராஜா, இல. 21, கண்டிறோட், நாவற்குழி. (45164)

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 15, மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை முன்பாக) (45029)

சீலிங், மேசை, பெடஸ்ரல் மின்விசிறிகள், ரீ. வீ. பூஸ்ரர் விற்பனைக்குண்டு. சு. சண்முகராஜா (விலை மதிப்பீட்டாளர்) 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (45178)

### திருமண சேவை

சைவ போசனம் அல்லது சைவ போசனமாக மாறக் கூடிய ஆண், பெண் சாதகர் குறிப்புடன் விவரங்கள் தேவை. (வயது 40-50 கவனிக்கப்படும்). இரகசியம் பேணப்படும். மே/பா இல. 578, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (45102)

### மணமகள் தேவை

யாழ். இந்து, சுமாரான உயரம், 26 வயதுள்ள, குற்றமற்ற பாவம் குறைந்த சாதகமுடைய, லண்டனில் எஞ்சினியர் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மணமகனுக்கு, அழகான, A/L கல்வித்தகைமையும், ஆங்கில அறிவுமுடைய மணமகள் தேவை. சகல விவரங்களுடன் தொடர்பு: த. இராசலிங்கம், கண்டி வீதி, (வைத்தியசாலையடி) சாவகச்சேரி. (45131)

இந்து செவ்வாய் குற்றமற்ற, ரேவதி நட்சத்திரம், அமெரிக்காவை வதிவிடமாகக் கொண்ட வங்கி ஊழியர், 41 வயது மணமகனுக்கு 32 வயதுக்கு மேற்படாத மணமகள் தேவை. சு. சண்முகராஜா (விலை மதிப்பீட்டாளர்), 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (45177)

### வாடகைக்கு

வண்ணை சிவன் சந்தி அருகில் தனி அறை, நிரந்தர வேலை பார்ப்பவருக்கு, முற்பணம் 1000/- வாடகை 300/-. தொடர்பு: ந. விக்னேஸ்வர ஆச்சாரியார், ஜெயந்தி ஸ்ரோர்ஸ், 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (45181)

### ஆசிரியர் தேவை

ஜீ.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவருக்கு அளவையியல், பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களில் துரித பயிற்சியளிக்க ஆசிரியரோ/ஆசிரியர்களோ அல்லது சித்தியடைந்த பல்கலைக்கழக மாணவரோ உடன் தேவை. யாழ். நகரை அண்மித்த பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. மேலதிக விவரங்கள் நேரில். தொடர்பு: மே/பா இல. 582, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (45186)

### "நீமியா" இயற்கை உரம்

நீமியா எல்லாப் பயிர்களுக்கும் அடிப்பசளையாகவும், மேற்பசளையாகவும் பாவிக்கலாம். தீங்கற்றது; அமோக விளைச்சல் பெறலாம். எல்லா கமநலசேவை நிலையங்களிலும் அண்ணா கோப்பிக்கடைகளிலும், விற்பனைக்குண்டு. பாவித்தவர்கள் மீண்டும் பாவிக்கிறார்கள். மில்க்வைற். (சி/71)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (லக்கோன் சேவல்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (45174)

## படையினரால் கைதான 4 குருநகர் மீனவர் விடுவிப்பு

குருநகர், பெப். 9

படையினரால் விசாரணைக்காக கைது செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த நால்வர் கடந்த வியாழனன்று விடுவிக்கப்பட்டனர்.

இராணுவத்தினரின் அனுமதியுடன் மீன் பிடிக்கச் சென்று இரண்டு தினங்களின் பின் திரும்பிய சூசைப்பிள்ளை யோகம் என்ற மீனவர் கடந்த முதலாம் திகதி கரை திரும்பிய வேளை படையினரால் கைதானார். அதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாயன்று மேலும் மூன்று குருநகர் வாசிகள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் நால்வருமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஐ-51)

## A/L பௌதிகவியல் வகுப்புகள்

புதிய பாடத்திட்டத்திற்கமைய குழு வகுப்புகள் **19-2-97** இலிருந்து **96 (Repeaters), 97, 98 & 99** ஆண்டுகளுக்கு கீழ் குறிப்பிட்ட முகவரியில் ஆரம்பமாகவுள்ளன. உடனடியாகப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஆசிரியர்:
**திரு. சுகேந்திரன்** B. Sc. (Special in Physics)
(முன்னாள் போதனாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

முகவரி: **36/20, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.**

(45140)

## போட்டோஸ்ரற்

போட்டோ பிரதிகளை வேண்டுமான அளவில்
★ பெரிதாகவோ ★ சிறிதாகவோ
பெற்றுக் கொள்ள

**கிளீன்கட்**
(ராணி தியேட்டர் அருகாமை)
**பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.**

(45183)

## கிளீன் கட்

★ அடையாள அட்டை கவரிடுதல்
★ றோணியோ வேலைகள்
★ போட்டோ பிரதிகள்

யாவற்றையும் யாழ். நகரில் ஒரே இடத்தில் செய்து பெற்றுக் கொள்ள

**கிளீன் கட்** பஸ் நிலையம் (ராணி தியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம்.

(45182)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை இந்து மத குருபீடாதிபதி
**மறைதிரு சிவப்பிரம்ம ஸ்ரீ சிவ அருள்ஜோதி**
**ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்**
அவர்களின் மறைவையொட்டி

துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

**ஆலய பூசகரும்,**
**இணுவில் மஞ்சத்தடி வாழ் மக்களும்.**

(45175)

## 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



சிவ பூமி: 20 — 09 — 1924

சிவன் பாதம்: 10 — 02 — 1994

இணுவில்
**திருமதி லில்லிமலர் சின்னத்துரை**
(யோகம்மா)
**திதி: 07-02-1997**

வயிற்றில் எமைச் சுமந்து
வாழ்வு எலாம் எமக்காக்கி
உள்ளம் நிறைந்து நிற்கும் - எம்
உத்தமியே - அம்மா!
வணங்குகிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

''துரைமலர்ப் பொய்கை''
இணுவில்

(45111)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கனகசபை தங்கம்மா**

உதயம்: **01–01–1910**
மறைவு: **11–01–1997**

**திதி: 10 - 02 - 1997**

அன்பான தாயே, ஆருயிர்த் தெய்வமே!
பாசப்பிணைப்பால் எம்மை வளர்த்து
நேசத்துடிப்பால் உயிர்காத்து
கண்ணை இமைகாப்பதிலும் மேலாகக் காத்து
பாசத்தின் பெருமை சொல்லிப் பிள்ளைகள்
எம் வாழ்வுக்காய் பெரும்பாடுபட்டீர்கள்.
கற்றவர் மத்தியில் தலைநிமிர்ந்து வாழவைத்தீர்கள்.
நாம் வாழும் நேரத்தில் கண்களைக்
குளமாக்கி கண்மூடிச் சென்றதேனோ?
முப்பத்தொரு நாள் ஓடிமறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்ப் பூக்களால் சிலாவிலாவைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியை நிகழ்வுகள் நாளை (10-02-97) நடைபெறவுள்ளன. உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகம் தந்து, மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

புகையிரதநிலைய வீதி,
கொடிகாமம்.

(45165)

## கோயில் தேவைகளுக்குரிய

() பட்டுக்குடை () கொடி () ஆலவட்டம்
() வாகுமாலை () வெண்சாமரம் () வலம்புரிச்சங்கு

ஆகியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன்
தேருக்குரிய மேல்சீலைவேலையும் ஓடருக்கு தைத்துக் கொடுக்கப்படும்.

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அஜந்தா ரேட் லிமிட்டெட்

**54, பெரியகடை, யாழ்ப்பாணம்.** **66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(45109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

# உதயன்

## ஆலயத்தினூடு சமூகப்பணி

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பதினைந்தாவது ஆண்டு விழா இன்று நடைபெறுகின்றது. இந்தச் செய்தி, மகளிர் இல்லத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி சமூக மேம்பாட்டில் அக்கறையுள்ள சகலருக்குமே மகிழ்ச்சி தருவதாகும்.

அதனைவிடவும், சைவ சமய மக்களுக்கு, மிகக் குறிப்பாக ஆலய நிர்வாகிகள் மற்றும் பரிபாலன சபைகளைச் சேர்ந்தவர்களுக்கு, ஒரு சிறந்த முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் கொள்ளப்பட வேண்டிய ஒன்றுமாகும்.

சைவ சமயிகளைப் பொறுத்தவரையில், சமயம் என்பது வெறும் ஆலயக் கிரியைகளோடும், நூல்களோடும் மட்டுப்படுத்தப்பட்டதாகி விட்டது. அதனால் சமயம் வேறு சமூகம் வேறு என்ற இடைவெளி பரந்து போயுள்ளது.

முந்திய காலத்தில் ஆலயங்களுக்கு தர்மச்சொத்துக்கள் உருவாக்கப்பட்டு, நன்கொடை செய்யப்பட்டு அவற்றைக் கொண்டு அறச்சாலைகள், கல்விச் சாலைகள், அன்ன சாலைகள் நிறுவப்பட்டுச் சமூகத் தொண்டுகள் செய்யப்பட்டன; செய்விக்கப்பட்டன. மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்று மட்டும் கொள்ளப்படாமல், ஈஸ்வரனுக்குச் செய்யப்படும் பூசையாகவும் போற்றப்பட்டது. ஆலயங்கள் மக்களின் வாழ்க்கை வளம்பாட்டுக்கு மூலவேர்களாக விளங்கின.

தமிழகத்தில் இன்றும் இந்த நிலை தொடர்கிறது. ஆதீனங்களே பாடசாலைகள், வைத்தியசாலைகள், கலாநிலையங்களை நடத்திச் சமூக சேவை புரிகின்றன.

யாழ்ப்பாணத்தில் இந்த வரிசையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினரே முன்னோடிகளாக, ஆலயப் பணியுடன் சமூகப் பணிகளையும் செய்து வருகின்றனர்.

ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கென ஓர் இல்லத்தை நிறுவி, அவர்களது அறிவு ஆன்ம, உடல் வளர்ச்சிக்குத் தேவையான சகல வசதிகளும், வாய்ப்புகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்கள் சமய நெறி நின்று வாழ்வதற்குப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

இந்தப் பெரும் சமூகப் பணியை இந்தக் கஷ்ட காலத்திலும் தளர்வில்லாமல் உறுதியுடன் நெறிப்படுத்தி வரும் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, சமகாலத்தில் ஆலயத்தினூடு சமூகத் தொண்டு புரிவதில் ஒப்பாரும் மிக்காருமற்று விளங்குகின்றார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு மக்கள் சென்று வழிபடும் வாய்ப்புப் பறிக்கப்பட்டு விட்ட போதிலும், தமது அறப்பணிகளை துர்க்கா துரந்தரி மன உறுதியுடன் தொய்வில்லாமல் செய்து வருகிறார்.

துர்க்கா மகளிர் இல்லம் அங்கும் இங்குமாக இடம் பெயர நேரிட்டு, இப்போதும் கூட மருதனார் மடத்தில் இயங்குகிறது. ஆயினும் இந்த இல்லத்தைச் சேர்ந்த மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருக்கிறார்கள்.

இந்தச் சாதனைகள் யாழ்ப்பாணத்தின் ஏனைய ஆலய நிர்வாகிகளின் கண்களைத் திறக்குமா?

தேர்தல் கடமைகளுக்காக

# வடக்கு - கிழக்கிலிருந்து பொலீஸார் வாபஸ் பெறப்படமாட்டார்கள்

### பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

தேர்தல் கடமைகளுக்காக வடக்கு — கிழக்கு போர் முனையில் இருந்து பொலீஸார் வாபஸ் பெறப்படமாட்டார்கள் என்று உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் கடமைகளுக்காக 30 ஆயிரம் பொலீஸார் தேவையாக இருந்தபோதும், போர் முனைகளில் இருந்து பொலீஸார் வாபஸ் பெறப்பட்டால் அது பாதுகாப்புக்கு குந்தகமாகிவிடும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

8 ஆயிரத்து 246 தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது என்றும் —

புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் எல்லைப்புறப் பிரதேசங்களில் இராணுவம் பாதுகாப்பை மேற்கொள்ளும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்ட பின் தற்போதைய தேர்தல் ஆணையாளர் திஸநாயக்க எதிர் நோக்கும் முதல் தேர்தல் இதுவாகும்.

(இ-3-150)

## பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா

வலிகாமம்தெற்கு, பெப் 9

மகரகம தேசிய கல்வி நிறுவக கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறையினராக் 1997—98 ஆம் ஆண்டுகளில்கான தமிழ் மொழிமூல பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாட நெறிக்கான பயிலுனர்களை தெரிவு செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், இலங்கை அதிபர் சேவை அதிகாரிகள், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், ஆசிரிய கல்லூரி, கல்விப்பீட விரிவுரையாளர்கள் போன்றோர் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

தொலைக் கல்விப் பாங்கான 18 மாத கால இப் பயிற்சிநெறிக்கு 51 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன் மகரகம தேசிய கல்வி நிறுவக கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## கும்பாபிஷேகம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் முப்பத்து மூன்று குண்ட உத்தமோத்தம மஹாயாக ஜீர்ணோத்தாரண ஸ்வர்ண பந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

கடந்த திங்கட்கிழமையில் இருந்து கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று இன்றைய தினம் மஹா கும்பாபிஷேகம் நிகழ்கின்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மஹாகவிர் நிவேதனம், அகண்ட தீபம், தசதர்சனம் ஆசீர்வாதம், மஹா அபிஷேகம் ஆகியன நடைபெற உள்ளன.

மாலை நான்கு மணிக்கு விசேட பூஜை, பஞ்சமுகார்ச்சனை, திருவூஞ்சல் ஆகியன நடைபெற்று பஞ்சமூர்த்திகள் திருவுலா வரும் நிகழ்வுகளும் இடம்பெறும். (அ-152)

# இலங்கை உள்ளூராட்சி தேர்தலில் பொ.ஐ. முன்னணியே வெல்லுமாம்

### தமிழ்நாட்டு சோதிடர் ஒருவர் கணிப்பு

கொழும்பு, பெப். 9

'உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிவெற்றி பெறும். எதிர்வரும் நவம்பரில் நடைபெறப் போகும் தேர்தல் ஒன்றில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐ.தே.க.ஆகியவற்றில்இருந்து பிரிந்து செல்லும் இளம் சமுதாயம் அங்கம் பெறும் அணி வெற்றி பெறும்.'

இப்படி இந்தியாவின் பிரபல சோதிடரான கந்தசாமி என்பவர் தெரிவித்ததாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

தாம் இந்தியாவுக்குச் சென்று அந்தச் சோதிடரைச் சந்தித்துப் பேசியதாகவும் —

முன்னர் இதே சோதிடரை ஜி.எம். பிரேமச்சந்திரா சந்தித்திருந்தார் என்றும் — அவர் தெரிவித்தார்.

அந்தச் சோதிடரைப் பிரேமச்சந்திரா சந்தித்த போது 'நீர் காமினி திஸநாயக்காவுடன் ஒரே மேடையில் இருக்காதீர்' என்று அந்தச் சோதிடர் தெரிவித்திருந்தார் என்றும் —

இதைக் கவனிக்காது அவர் காமினி திஸநாயக்காவுடன் மேடையில் இருந்த போது கொல்லப்பட்டு விட்டார் என்றும் — பிரஸ்தாப ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணிப் பிரமுகர்மேலும் கூறினார்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் பற்றித் தாம் கேட்ட போது, "யுத்தம் தொடரும் நாட்டுககுக் காலம் அவ்வளவு நல்லதல்ல" என்றும் அந்த சோதிடர் தெரிவித்தார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய பிரமுகர் கூறினார்.

(இ-3-150)

## விதவை வாழ்வில் ஒளியேற்றிய எலியாவின் இறைபற்றும் சாட்சியும்

ஒருகாலத்தில் ஆகாப் மன்னன், சமாரியாவின் ஆட்சித் தலைவனாகப் பணி புரிந்தான். ஆகாப் மன்னனின் அரசாட்சிக் காலத்தில் சமாரியா அரசியல் கெடுபிடிகள், பொருளாதார வீழ்ச்சி, பண வீக்கம், அரசியல் கொலைகள் என்பவற்றைச் சந்தித்தது.

இவரின் அரசாட்சிக் காலத்தில் வறட்சி காரணமாக சமாரியாவில் பஞ்சம் ஏற்பட்டது. இவ்வறட்சி, பஞ்சம் பற்றி எலியா முற்கூட்டியே தீர்க்க தரிசனம் உரைத்து, ஆகாப் அரசனை எச்சரித்தான்.

ஆனால் ஆகாப் அரசன் எலியாவின் தீர்க்க தரிசன எச்சரிப்பினை அலட்சியம் செய்தான். எலியா, தனது அரசை செயலிழக்கச் செய்ய சதி செய்கின்றான் எனச் சந்தேகம் கொண்டான் ஆகாப் அரசன்.

எனவே எலியாவைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினான் ஆகாப் அரசன்.

இதனால் எலியா தன் நாட்டை விட்டு, பாதுகாப்புக் கருதி தப்பி ஓடும் நிலை ஏற்பட்டது.

எனினும் கடவுளின் மனிதனாகிய எலியா எங்கு ஓடி, மறைந்து கொண்டாலும் அங்கெல்லாம் வாழும், வாழ்வு கொடுக்கும், வாழ்வைப் பராமரிக்கும், போஷிக்கும், வழி நடத்தும் இறைவனின் சமூகத்தை உணர்ந்து கொண்டான், அனுபவித்தான்

கேரீத் ஆற்றண்டையில் காகங்களுக் கூடாக அவன் போஷிக்கப்பட்டான். சாரிபாத் என்னும் பட்டணத்திலே விதவையினால் போஷிக்கப்பட்டான்.

எலியா, அந்த விதவையை நம்பிக்கையற்ற நிலையில் இருந்து விடுவிக்க, வாழ்வு கொடுக்கும் கடவுளை, வாழ்வை ஆசீர்வதிக்கும் கடவுளை அவளுக்கு அறிமுகம் செய்கின்றான்.

காலப்போக்கில் அவளது சிந்தனை, நம்பிக்கை மாறியது. அவள் வாழ்வு கொடுக்கும், வாழ்வினை ஆசீர்வதிக்கும் கடவுளின் பெலனைத் தனது வாழ்வில் அனுபவித்தாள். அவளது வாழ்விலும் குடும்ப வாழ்விலும் ஒரு மாற்றம், புதுவாழ்வு, வளர்ச்சி ஏற்பட்டது.

### ஞாயிறு நற்பிரசாதம்

எலியாவின் இறைபற்றும், சாட்சியும் அவ்விதவையின் வாழ்வில் புதிய ஆரம்பம், புதிய வாழ்வு ஏற்பட வழி ஏற்படுத்தியது.

கடவுளின் அன்பு மனித இருதயத்தில் ஆட்சி செலுத்தும் பொழுது, அம்மனிதன் தான் என்னத்தைப் பெற்றுக் கொள்கிறான் என்பதில் அல்ல, என்னத்தைப் பூரண மனத்துடன் இறை பணிக்காக ஒப்படைக்கின்றான் என்பதிலேயே பூரண மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்படுகின்றது.

— அருட் திரு பேட்றம் ஜெயக்குமார் மேதர்

### நாளை

தை 28
திங்கட்கிழமை

திதி: திருதியை
பிற்பகல் 3 04 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 2.06 வரை.
சதுர்த்தி விரதம்
இராகுகாலம்: 8.04 - 9.34
சுபநேரம்: 12.34 - 2.04
(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

## யாழ்ப்பாணத்துக்கு தரைப்பாதை விரைவிலே திறக்கப்படும்!

### அமைச்சர் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

யாழ்ப்பாணத்துக்கு தரை வழிப்பாதை விரைவில் திறக்கப்படும். அதற்கான நடவடிக்கையில் படையினர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு முடிவில் மூன்றாவது ஈழப்போருக்கு முடிவு கட்டப்படும்.

இந்த நாட்டில் அமைதி ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (இ)

## சித்தாண்டியில் குண்டு வைத்து பாலம் தகர்ப்பு

கொழும்பு, பெப். 9

சித்தாண்டி மகிழடிப் பாலம் கடந்த வெள்ளிக்கிழமை காலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் வயல்களுக்கு உழவு இயந்திரம் செலவது பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)

## நகரில் சைக்கிள் திருட்டு இப்படியும் நடக்கிறது!

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். நகரில் புது வகையான சைக்கிள் திருடர்கள் இப்போது உலாவுகின்றனர்.

நவீன சந்தைக்கு அருகே கடந்த வியாழனன்று நிறுத்தப்பட்டிருந்த பெண் ஒருவரின் சைக்கிள் பூட்டை உடைத்து திருடப்பட்டுள்ளது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் பூட்டிய சைக்கிளை திருடர்கள் உடைக்கவில்லை. திறப்புத் தொலைந்துவிட்டது என்று கூறி அருகே இருந்த சைக்கிள் திருத்துநரிடம் சைக்கிளைத் தூக்கிச் சென்ற இரு நபர்கள் பூட்டை உடைத்து திறந்துகொண்டு சைக்கிளுடன் மாயமாய் மறைந்துவிட்டனர்.

பொருள்கள் வாங்க நவீன சந்தைக்குள் சென்ற சைக்கிள் உரிமையாளரான பெண் திரும்பி வந்து பார்த்தார். சைக்கிளை காணவில்லை. பதற்றத்துடன் அருகே இருந்த சைக்கிள் திருத்துநரிடம் விசாரித்தபோது நடந்தது தெரிய வந்தது.

ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார் அந்தப் பெண்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு ஏப்ரல் மாதமே இனிக் கூடும் என அறிவிப்பு

கொழும்பு, பெப். 9
இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு இனி ஏப்ரல் மாதமே கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் கூடிய தெரிவுக் குழு உத்தேச பிரதேச சபைகளின் நிர்வாக முறை பற்றி ஆராய்ந்தது.

உள்ளூராட்சித் தேர்தலில் சகல கட்சியினரும் தீவிரமாக பிரசாரப் பணிகளில் ஈடுபட வசதியாகவே ஏப்ரல் மாதத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (இ-3-150)

## சிவராத்திரியன்று ஊரடங்கை தளர்த்துமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய், பெப். 9
இந்துக்களின் புனித நாளான மகா சிவராத்திரி அன்று இரவு நேர ஊரடங்கைத் தளர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி மகா சிவராத்திரி அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் இரவு முழுவதும் இந்து ஆலயங்களில் வழமையாக இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளில் இம்முறையும் பக்தர்கள் கலந்துகொள்ள வசதியாக இரவு ஊரடங்கை தளர்த்துமாறு யாழ். இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். இராணுவப் பொறுப்பதிகாரிக்கு இந்துசமயப்பேரவை மகஜர் ஒன்றை அனுப்பியிருக்கிறது. அந்த மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-135)

## பிரதேச சபை உறுப்பினர் சுட்டுக் கொலை

திருகோணமலை, பெப். 9
மூதூரில் பெரியபாலம் பகுதியில் நேற்றுக்காலை பிரதேச சபை உறுப்பினரான தங்கவேலு என்பவர் இனம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கைத்துப்பாக்கியினாலேயே இவர் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## 5 ஆம் நாளாக போக்குவரத்து ஸ்தம்பிதம்

வவுனியா, பெப். 9
கடந்த ஐந்து நாள்களாக தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து நடைபெறவில்லை.

வடக்கேயிருந்து பொருள்கள் வாங்க வவுனியா நகருக்குள் வந்தவர்களும், தெற்கில் இருந்து வடக்கே செல்ல வவுனியா வந்தவர்களும் வவுனியா நகரில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உணவு லொறிச் சேவையும் தடைப்பட்டுள்ளது. (இ-3-150)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 47 சிற்றூழியர்கள்

யாழ். ஆஸ்பத்திரியில் நிலவில சிற்றூழியர்கள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய 47 சிற்றூழியர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

யாழ். மாவட்ட எம்.பியான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்த நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த சிற்றூழியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று ஆஸ்பத்திரியில் இடம்பெற்றன.

இன்றும் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறவிருக்கிறது.

செயலக வேலை வங்கியில் இருந்து இந்த நியமனம் வழங்கப்படுகிறது. (இ-3)

## கன்னியா
## வெந்நீர்க் கிணறு மக்கள் பாவனைக்கு

திருகோணமலை கன்னியா வெந்நீர்க் கிணறு கடந்த 10 வருடங்களின் பின் இப்போது மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்ட இந்த வெந்நீர் கிணற்றுப் பகுதிக்கு மக்கள் செல்ல விசேட பஸ் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப்பிரதேசத்தில்புதைக்கப்பட்டிருந்த பொறி வெடிகள், கண்ணி வெடிகள் ஆகியவற்றை நிலாவெளி பிரிக்கேட் 17 தளபதி கேணல் ஜி எம். றொக்வூட் அகற்றி மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்துள்ளார். (இ-3-150)

## நோபல் பரிசுக்கு காட்டரின் பெயர் சிபார்சு

நியூயோர்க், பெப். 9
இவ்வாண்டுக்கான சமாதான நோபல் பரிசுக்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டரின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைக்கச் செய்ய காட்டர் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். எனவே அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-)

## வவுனியாப் பகுதியை...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)
இதில் ஒரு ஆட்லறி மூலமே பரீட்சார்த்தமாக ஷெல்கள் ஏவப்பட்டன. இனி எந்த நேரத்தில் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடக்குமோ என்ற அச்சத்தின் மத்தியில் மக்கள் இருக்கிறார்கள்.

கேள்வி:- வவுனியாவில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் ஏதாவது விசேட ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதா?

பதில்:- விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டால் எவ்வாறான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி இதுவரை பொது மக்கள் அறிவுறுத்தப்படவில்லை. விடுதலைப் புலிகள் தாக்குகிறார்களா அல்லது இராணுவம் தாக்குகிறதா என தெரியாமல் தாக்குதலுக்கு இரையாகி மரணமடைய நேரிடுமோ என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கேள்வி:- வவுனியா மக்கள் பாதுகாப்புக்காக பதுங்கு குழிகள் அமைக்கத் தேவை இல்லையா?

பதில்:- இதுவரை பதுங்கு குழிகள் அமைக்கப்படவில்லை. இன்று அல்லது நாளை அனைத்து வீடுகளிலும் பதுங்குகுழி அமைக்க வேண்டிய தேவை ஏற்படலாம் என நினைக்கிறேன்.

இதற்கிடையில் வவுனியாவுக்கு 12 மைல்கள் தொலைவில் உள்ள ஓமந்தைக் காட்டிலிருந்து இந்த ஆட்லறி ஷெல்கள் புலிகளால் ஏவப்பட்டதாகவும் —

பாதுகாப்புப் படையினர் இந்தத் தாக்குதல்களை முறியடித்ததாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-5-10)

## இன்று

வடலியடைப்பு - பாரத்தனை ஸ்ரீ ஐயனார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (ஐ-30)

## இணுவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று இடம்பெற்றதாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தாக்குதலில் சில படையினர் இறந்திருக்கலாம் என்றும் தெரிய வந்தது.

எனினும் இவை குறித்து ஊர்ஜிதப்படுத்தக் கூடிய தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. (இ-15)

## பிரிட்டிஷ் பிரதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இங்கு அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வரும் லிம் பொக்ஸ் 11 ஆம் திகதி வரை இங்கு தங்கி இருப்பார்.

அதேசமயம் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி வெளிவிவகார அமைச்சர் ரோபின் ராபெல் ஏற்கனவே இரு தடவைகள் இலங்கை வந்து திரும்பி உள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஈடுபட்டுள்ளனர் என்று நம்பப்படுகிறது. (இ-5)


## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

உ

**அன்புடையீர்!**

நிகழும் தாது வருஷம் தை மீ 27 ஆம் நாள் 09-02-1997 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11-30 மணி முதல் 12-00மணிவரையிலுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

அமரத்துவமடைந்தவர்களான யோகராசா இராஜேஸ்வரி (மலர்) தம்பதியரின்
**செல்வப் புதல்வி – திருவளர் செல்வி**
**தர்மினி** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவைபவம் செய்து வைக்கத்திருவருள் கை கூடியிருப்பதால் அத்தருணம் அனைவரும் வந்து எங்கள் அன்புச் செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ பால் அறுகு வைக்கும் வைபவம் காலை 7-30 மணி முதல் 8-00 மணிவரையில் நடைபெறும்.

— தங்கள் நல்வரவை நாடும்
**திருமதி இராசநாயகம் பவளரெத்தினம்மா**
1010/39, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (45193)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை, பருத்தித்துறை.**
**1996 - ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களான**

**நந்தபாலன் ரஞ்சித்பாலன் - 110 புள்ளிகள்**
**சர்வானந்தம் டிலிப்குமார் - 107 புள்ளிகள்**

ஆகியோரையும்
**யா/ ஹாட்லிக்கல்லூரி, யா/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி**
ஆண்டு 6 அனுமதிப் பரீட்சையில் சித்திபெற்ற ஆறு மாணவர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்!

**பெற்றோர், நலன் விரும்பிகள்.**
பருத்தித்துறை. (45194)

## இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்
## சிமெந்து விற்பனை

சிமெந்து உற்பத்தியில் பல வருடங்களாக முன்னோடியாக விளங்கிய இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தற்பொழுது பிரித்தானிய தர நிர்ணயத்திற்கு அமைவாகவுள்ள **DIAMOND 525 R** ரக சிமெந்தினை இறக்குமதி செய்து பாவனையாளர்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இச்செய்தியினை பாவனையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு சிமெந்து தேவைப்படும் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் முகவர்களும் விரைவில் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**விற்பனை உத்தியோகத்தர்**
**இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்.**

**பொறுப்பதிகாரி,**
**விற்பனைப்பகுதி,**
**இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்,**
**65, கனைதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி/77)

## 21 ஆம் நூற்றாண்டுக்குரிய பொது மனித இலக்கியம்

### “ஒன்றே குலம்” “ஒருவனே தேவன்”

முழுமையான இலக்கிய மரபுகளுக்கமைய, ஒப்பியல்பில் உலகில் உருவான இலக்கியங்களுக்கிடையேயான பொதுத்தன்மை கொண்ட ஆய்வு இலக்கியமாக அமைந்தாலும், பெரும்பாலான இலக்கியங்களை உள்வாங்கி...

## “புதிய கருத்துகள்”

என்னும் தொடர் நூல் இராம ஜெயபாலனினால் பதிவாகி வெளிவரஇருக்கின்றது. இதுமுழுமனித இனத்திற்கும் பொதுவான நூலாகும்.

எதிர்பாருங்கள்! விரையுங்கள்!!

(45163)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org